2. அறிவிப்புகள். (தொடர்ச்சி)

(இ) ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப் படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப் படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(இ) ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே ''ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவை'' பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: இதுவும் அப்படித்தான். இந்த ஆர்டர் தேவையில்லை. ஏற்கனவே எக்சிகியூட்டிவ் ஆர்டர் போட்ட பின்னால், லெஜிஸ்லேஷன் தேவை என்றால் ஏன் எக்சிகியூட்டிவ் ஆர்டரைப் போட்டீர்கள்? சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால் அதைப்பற்றி எல்லாம் யோசிக்கவில்லையா? இங்கே 'லா' டிப்பார்ட்மெண்ட் இல்லையா? லா டிப்பார்ட்மெண்ட் 'லோ' டிப்பார்ட்மெண்டாகப் போய்விட்டதா? இதற்கு என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:— ''ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம்செய்யப் பெற்றிருக்கிறது.